மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுரேந்திரன் போட்ட கேள்வியையே நீங்கள் மறுபடியும் போடுகிறீர்கள்

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இந்தச் சம்பவத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் காரணங்கள் எதுவும் கூறி தட்டிக் கழிக்க இந்த அரசு விரும்பாத காரணத்தினால் தான் அந்த காவல் துறை துணை மேற்பார்வையாளர் தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டு விசாரணை நடந்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அந்த மரணத்திற்கான காரணம் என்னவென்று மருத்துவ நிபுணரால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா ? அது வயலன்ஸினால் ஏற்பட்டதா அல்லது வேறு காரணங்களா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அடிபட்டதால் அப்படிப்பட்ட கோளாறு ஏற்பட்டிருக்கக் கூடும் என்று மருத்துவ அறிக்கை கூறுகிறது. அடிபட்ட வேலு என்பவர் 16-ம் நாளன்று காவல் நிலையத்திலிருந்து வெளியே அனுப்பப்பட்டார். ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டது 27-ம் தேதியன்று. இந்த இடைவெளி இருப்பதால் அடிக்கப்பட்டது போலீஸாரால் அல்லது வேறு நிகழ்ச்சியாலா என்று அறிய அந்த விசாரணை நடைபெற்றது.

Congress Conference at Dindigul.

* 151 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether some students of Dindigul attempted to set fire to the premises and pandal when Thiru C. Subramaniam, President of T.N.C.C. was addrtssing a Congress Conference on 10th February 1968; and

(*b*) if so, the damage sustained due to the incident ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : இந்த நிகழ்ச்சி நடந்து அதற்கு வேண்டிய விளம்பரங்கள் எல்லாம் பத்திரிகைகளில் வந்தன. அந்தமாதிரி மாணவர்கள் அந்தப் பந்தலுக்கு நெருப்பு வைக்க முயற்சித்ததால் மேலும் தொடர்ந்து இன்னும் தொல்லைகள் ஏற்படும் என்று கருதி எங்கள் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அந்தக் கூட்டத்தில் கூட பேசாமல் விட்டுவிட்டு அதைக் கலைத்து விட்டு வந்ததை நாங்கள் எல்லாம் படித்தோம். அது உண்மையா ? இல்லை, இப்போது அமைச்சர் அவர்கள் சொல்கிறார்களே, அப்படி நடக்கவேயில்லை என்று சொல்கிறார்களே அது உண்மையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் அவையில் பதில் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். கேட்பதை எல்லாம் நம்ப நம்பி இங்கு கேள்வி கேட்கக்கூடாது என்று தீர்ப்பு இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : ஐயா சொல்லிவிட்டால் போதும்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : திண்டுக்கல்லில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாட்டின்போது அம்மாநாட்டுப் பந்தலின் பக்கத்திலுள்ள ஒரு குடிசையில் தீ பற்றிக்கொண்டதாகவும் அதை உடனடியாக அணைத்ததாகவும் செய்தி வந்தது. ஆனால், அந்தப் பந்தலுக்குத் தீ இட மாணவர்கள் முயன்றார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததும் உண்மை. ஆனால், மாநாட்டை நடத்திய காங்கிரஸ்காரர்களோ அல்லது அந்தக் குடிசை சொந்தக்காரரோ காவல் நிலையத்தில் அதுபற்றி எந்தப்

புகாரும் கொடுக்கவில்லை. இதுகுறித்து நடத்தப்பட்ட விசாரணை மூலம் தீ மூட்டப்பட்டதாகக் கூறப்படும் அந்த நிகழ்ச்சிக்கு மாணவர்கள் எந்த விதமான பொறுப்பாளிகளும் அல்ல என்பதற்கான சான்றுகள்தான் இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கலந்து கொள்வதாக இருந்த கூட்டத்தில் குழப்பம் விளைவிப்பதற்காக வெளியூர்களிலிருந்து மாணவர்களும் ஆட்களும் இறக்குமதி செய்யப்பட்டனரா?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இறக்குமதி ஏற்றுமதியெல்லாம் தெரியாத விஷயங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : திண்டுக்கல்லில் நடந்த மாநாட்டில் அதற்கு முதல் நாளில் மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மாணவர்களைப் பற்றி மிகவும் கேவலமான முறையில், மாணவர்கள் படிக்காமலேயே பரீட்சையில் பாஸ் செய்ய நினைக்கிறார்கள் என்று சொன்ன கருத்துக்கு மாணவர்கள் எதிர்ப்பு தொவிக்கிற வகையில் திண்டுக்கல்லில் கிளர்ச்சி செய்தார்கள். தமிழ்நாடு முழுவதும் கிளர்ச்சி செய்தார்கள். ஆகவே மறுநாள் நடக்க இருக்கும் மாநாட்டில் மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவார்களோ என்ற பயத்தினால் காங்கிரஸ்காரர்களே தீ வைத்துக் கொண்டார்கள் என்பது பற்றி ஏதாவது தகவல் வந்ததா?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்படி அவர்கள் தீ வைத்துக் கொண்டார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. அது மாத்திரமல்ல. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்கள் மாணவர்களைப் பற்றி அன்றையதினம் கூறிய கருத்தை பிறகு அவர்களே திரும்பப் பெற்றுக்கொண்டு வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் அவற்றையெல்லாம் கிளப்பி மறுபடியும் ஒரு புதிய நிலையை மாணவர்கள் மத்தியில் உண்டாக்கத் தேவையில்லை. இப்போதுள்ள மாணவ சமுதாயத்தில் புதிய கிளர்ச்சிகள் தோன்றுவதற்கு அது ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தினால் இதை அந்த அளவோடு நிறுத்தி விடுவது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

Compulsory collection for Small Savings.

* 114 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) whether the Government are aware of the circulation of printed statement by Tiruchirappalli Chamber of Commerce against compulsion used for collection for small savings; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) "வர்த்தக உலகம்" என்னும் திங்கள் 1968 மார்ச் இதழில் அரசாங்கக் கடன்கள், சிறுசேமிப்புப் பத்திரங்கள் முதலியவற்றுக்கு வசூல் செய்யும்போது துறை அதிகாரிகள் அச்சுறுத்துவதாகவும், மிரட்டுவதாகவும், குற்றம் சாட்டி திருச்சிராப்பள்ளி மாவட்ட வணிக மன்றத் தலைவரும் செயலாளர்களும் அறிக்கை வெளியிட்டுள்ளனர். முந்திய அரசாங்கம் ஆட்சியிலிருந்தபோதும் பல ஆண்டுகளாக இப்பழக்கம் இருந்து வந்துள்ளதென்றும் இது நிறுத்தப்படவேண்டுமென்றும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து எழுத்து மூலமான புகார் எதுவும் வணிக மன்றத்துக்கு வரவில்லையென்றும் வாய்மொழி மூலமே தெரிவிக்கப் பட்டுள்ளதென்றும் அந்த அறிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து அரசாங்கத்துக்குப் புகார் எதுவும் வரவில்லை.